بسم الله الرحمن الرحيم

# METHOD OF INITIATION

## TO THE JAMAAT UL SAHIH AL ISLAM

**ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம் அதாவது உண்மையான இஸ்லாமிய அமைப்பில் இணைந்துக் கொள்ளுவதற்கான வழிமுறைகள்.**

ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமில் இணைந்துக்கொள்ள விரும்புகின்றோர்கள் இந்த நூற்றாண்டின் கலீ∴பத்துல்லாஹ் (அல்லாஹ்வின் பிரதிநிதி), மஸீஹ் மௌஊத் (வாக்களிக்கப்பட்ட மஸீஹ்), முஜத்தீத் (சீர்திருத்தவாளர்) ஆகிய ஹஸ்ரத் அமீறுல் மூம்மினீன் முஹைத்தீன் முனீர் அஹமது அஸீம் அவர்களிடத்தில் நேர்மையான முறையில் ஒரு உறுதிமொழி செய்ய வேண்டும். நமது அன்புக்குரிய திரு நபி ஹஸ்ரத் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் மற்றும் அஹ்மதியா முஸ்லீம் ஜமா அத்தின் நிறுவுனராகிய ஹஸ்ரத் மிர்ஸாகுலாம் அஹமது (அலை) அவர்களுடையவும் போதனைகளைத் தொடர்ந்து எடுத்து செல்வதற்கும் மேலும் அல்லாஹ்வின்பால் மக்களுக்கு அழைப்பு விடுப்பதற்குமாக அல்லாஹ் அன்னாரை அதாவது ஹஸ்ரத் முனீர் அஹமது அஸீம் அவர்களை நியமித்திருக்கின்றான் என்று முழுமனதுடன் அங்கீகரித்துக் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் அமைத்த பை-அத்தின் நிபந்தனைகளில் முதல் ஒன்பது நிபந்தனைகளும் எவ்வித மாற்றவுமின்றி அவ்வாறே நிலைநிற்பதுடன் பத்தாவது நிபந்தனை தற்போதயை நிலைமைக்கு ஏற்றவாறு மாற்றத்திற்குள்ளாக்கப்பட்டதுமாகும்.

இந்நூற்றாண்டின் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் முனீர் அஹமது அஸீம் (அலை) அவர்களை நேரடியாக சந்திக்க முடியாதவர்கள் இந்த விண்ணப்பபடிவத்தை நிரப்பி அன்னாரின் முகவரியில் அனுப்பிக் கொள்ளலாம். இந்த நம்பிக்கை என்னும் உடன்படிக்கையின் நிபந்தனைகளை மிக நல்ல முறையில் படித்து, உணர்ந்து, உள்ளபூர்வமாக அதனை அங்கீகரத்திட வேண்டும். குடும்பத்தலைவர் இந்த உடன்படிக்கை படிவத்தை நிரப்பி மௌரீஷியஸ் ஜமா-அத்து தலைமையகத்திற்கு நேரடியாகவோ அல்லது தங்களது பகுதியைச் சார்ந்த ஜமா அத்துத் தலைவர் மூலமாகவோ அனுப்பிக்கொள்ளலாம்.

**முகவரி:**
31 மோர்செல்மென்ட்
கௌரிசங்கர்
பெற்றிட்-ரப்பிரே
மொரீஷியஸ்

**ADDRESS:**
31 Morcellement
Gowreesunkur,
Petit-Raffray,
Mauritius

## WE PRESENT TO YOU:

## உங்களுக்கு நாங்கள் சமர்பிக்கின்றோம்.

1. உறுதிமொழியின் (பை-அத்) நிபந்தனைகள் (ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அலை) அவர்கள் எழுதி தயார் செய்த நிபந்தனைகள்)
2. பை – அத் (உடன்படிக்கை) பற்றிய விரிவான விளக்கம்.
3. பை – அத்தில் (உடன்படிக்கையில்) ஏற்படுவதற்கான விண்ணப்ப படிவம்.

**MUNIR AHMAD AZIM**
**HAZRAT KHALIFATULLAH AL-MASSIH AL-MA'UD**

17 Shawwal 1431 AH
26 September 2010

IN THE NAME OF ALLAH, THE MOST GRACIOUS, THE EVER MERCIFUL

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருபெயரில்

## JAMAAT UL SAHIH AL ISLAM:

### THE CONDITION OF *BAI –ATH* (INITIATION) பை – அத் நிபந்தனைகள

DRAFTED BY **Hazrat Mirza Ghulam Ahmad (AS) (1835 – 1908)**

ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமில் இணைந்துக் கொள்ள விரும்புபவர்கள் பின்வரும் பத்து நிபந்தனைகள் மீது உறுதிமொழி செய்ய வேண்டும்.

1. நான் மரணமடைகின்றவரை ஷிர்க் என்னும் இறைவனுக்கு இணைவைப்பதிலிருந்து விலகி நிற்பேன்.
2. பொய், விபச்சாரம், தீயபார்வை, அனைத்து வகைப்பட்ட தீய செயல்கள், வஞ்சனை, பிறருக்கு அநீதியிழைத்தல், ஏமாற்றுதல், குழப்பம் விளைவித்தல் தேசத்துரோகம் ஆகிய தீமைகளை தவிர்த்துக் கொள்வேன். மன உணர்ச்சிகள் எந்த அளவு தீவிரமடைந்தாலும் அவற்றை அடக்கிக் கொள்வேன்.
3. இறைவனின் கட்டளையின் படியும் அவனுடைய தூதரின் கட்டளையின் படியும் ஐந்து வேளைத் தொழுகைகளை விடாமல் நிறைவேற்றி வருவேன். என்னால் இயன்றவரை தஹ்ஜுத் என்னும் நடு இரவுத் தொழுகையை கடைபிடித்துக் கொள்ளவும், முஹம்மது (ஸல்) அவர்களின் மீது சலாத்து ஓதிக் கொள்தலும், அனுதினம் எனது பாவங்களின் மீட்சிக்காக இறைவனிடம் மன்னிப்பு தேடிக் கொள்தலும் ஆகியவற்றில் தொடர்ந்து ஈடுப்படுவேன். இறைவனின் பேருதவிகளை நெஞ்சார நினைவில் கொண்டு அவனை தினமும் புகழ்ந்து வருவேன்.
4. உடலளவிலான தீய ஆவேசங்களை கட்டுப்படுத்துவதோடு, எல்லா மக்களுக்கும் குறிப்பாக முஸ்லீம்களுக்கு எனது மன உணர்ச்சியின் காரணமாக நாவினாலோ கைகளினாலோ வேறு வகையிலோ எந்தத் தொல்லையும் கொடுக்க மாட்டேன்.
5. துக்கம் - மகிழ்ச்சி, பணகஷ்டம்-பணவசதி, இறைவனிடமிருந்தக் கிடைக்கும் அருள் - அவனால் தரப்படும் வேதனை, (அருள் கட்டம், அபாயகட்டம்) ஆகிய எந்த நிலையிலும் இறைவனிடம் மனங்கோணாமல் பற்றுள்ளவனாக இருப்பேன். இறைவனின் தீர்ப்பை எல்லா நிலையிலும் உள்ளப்பூர்வமாக

ஏற்றுக் கொள்வேன். அவன் வழியில் எல்லா வகையான இழிவையும் இன்னல்களையும் ஏற்க தயாராக இருப்பேன். எத்தகைய தொல்லைகளுக்கு ஆளானாலும் முகஞ்சுளிக்காமல் முன்செல்வேன்.

6. சடங்கு சம்பிரதாயங்களில் இருந்தும் மனதின் சொந்த விருப்பங்களைப் பின்னற்றுவதில் இருந்தும் விலகிக் கொள்வேன். திருக்குர்-ஆனின் எல்லா கட்டளைகளுக்கும் முழுமையாகக் கட்டுபட்டு இறைவனின் போதனையின்படியும் அவனுடைய தூதரின் போதனையின்படியும் நடப்பதையே எல்லா நிலையிலும் எனது நடைமுறையாக, ஆக்கிக் கொள்வேன்.
7. தற்பெருமையும் அகம்பாவத்தையும் முற்றிலுமாக விட்டு விடுவேன். பணிவாக நடத்தல், இனிய குணம், சகிப்புத்தன்மை, எளிமை ஆகிய இவற்றையே கடைபிடித்து வாழ்க்கையை நடத்துவேன்.
8. மார்க்கம் அதன் கண்ணியம் இஸ்லாத்திற்குத் தொண்டு செய்தல் ஆகியவற்றை எனது உயிர், பொருள், கண்ணியம், குழந்தைகள், உறவினர்கள் ஆகிய எல்லாவற்றையும் விட மிகவும் உயர்வாகக் கருதுவேன்.
9. இறைவனின் படைப்புகளாகிய எல்லோருக்கும் தொண்டு செய்வதில் எந்தப் பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் இறைவனுக்காகவே தொடர்ந்து ஈடுப்பட்டிருப்பேன். அவனால் எனக்கு வழங்கப்பட்ட ஆற்றல் மற்றும் அருள்களை கொண்டு என்னால் முடிந்த வரை மனித குலம் பயன் பெறும் வகையில் பணியற்றுவேன்.
10. அல்லாஹ்வின் அன்பைப் பெறுவதற்காக இந்நூற்றாண்டின் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் அல்லாஹ்வின் கலீ.ஃபா ஆகிய ஹஸ்ரத் அமீறுல் மூம்மினீன் முனீா் அஹமது அஸீம் அவா்களின் தெய்வீக வழிகாட்டுதலின்படி இஸ்லாத்தின் எல்லா நல்ல காரியங்களுக்கும் முழுமையாக நான் கட்டுப்படுவேன் என்ற உடன்படிக்கையில் மரணமடையும் வரை நான் நிலைத்திருப்பேன். அத்துடன் மற்றெல்லா வகையான உலகத்தொடர்புகளைவிடவும் இநத சகோதர உடன்படிக்கை மிகவும் உயர்ந்ததாக இருக்கும் என்றும் நான் உறுதி கூறுகிறேன். இன்ஷா அல்லாஹ்

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திரு பெரில்

# JAMAAT UL SAHIH AL ISLAM

## ADDITIONAL EXPLANATIONS ON THE BAI' ATH (INITIATION)

### பை-அத் உடன்படிக்கையின் சிறப்பான விளக்கம்

அல்லாஹ்வின்பால் மக்களை அழைப்பதற்கான மாபெரும் பணியை அதாவது அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் கடந்த நூற்றாண்டின் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அலை) அவர்களுடைய போதனைகளை தொடர்ந்து எடுத்து செல்வதற்கு எல்லாம் வல்ல அல்லாஹ் என்னை நியமித்திருக்கின்றான். இந்நூற்றாண்டின் கலீ∴பத்துல்லாஹ், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் முஜத்தீதாக அல்லாஹ் என்னை தேர்ந்தெடுத்திருக்கின்றான். இந்த நற்செய்தியை எல்லாம் வல்ல அல்லாஹ் என்னை தெரியப்படுத்தியிருக்கின்றான்.

உண்மையை தேடுகின்ற எல்லா முஸ்லீம்களும், அல்லாஹ்விடம் ஆழமான உறவை ஏற்படுத்த விரும்புவோர்களும் மற்றும் அல்லாஹ் வகுக்கும் பாதையில் பயணம் மேற்கொள்ள உள்ளபூர்வமாக ஆசைபடுவோர்களுமான நபர்கள் அல்லாஹ்வின் இந்த தாழ்மையான ஊழியரிடம் ஒரு உறுதிப்பிரமாணம் செய்ய வேண்டும். அல்லாஹ் விரும்பினால் இத்தகைய திட்டத்தில் (பை-அத்) ஏற்பட்டு முன்செல்ல முடியும் என்று நினைப்பவர்களை நிச்சயமாக அல்லாஹ் ஜமாஅத்துச் சஹீஹில் இஸ்லாமில் வழி நடத்தி செல்வான், இன்ஷா அல்லாஹ். அல்லாஹ்வின் அருளால் நான் அவர்களுக்காக பிரார்த்தனை செய்வேன், மேலும் அவர்கள் செய்த இந்த உறுதிமொழியின் நிபந்தனைகளைப் பின்பற்றுவதில் உறுதியாக இருந்தால் அல்லாஹ்வின் உதவியால் அவர்களின் சுமைகள் குறைந்துவிடும்

பை-அத்தின் பொருள் என்பது ஒரு ஆன்மீக உடன்படிக்கையாகும் அதாவது அது ஒரு நல்லொழுக்க ஒப்பந்தம் என்பதை அறிந்துக் கொள்ளுங்கள். இது, இந்நூற்றாண்டின் வாக்களிக்கப்பட்ட் சீர்திருத்தவாளருடன் புதிதாக பை-அத் செய்யும் நபர் ஏற்படும் ஒரு நல்லொழுக்க உடன்படிக்கையாகிறது. நேர்வழியைக் குறித்த **(Siratwal Mustaqeem)** திருக் குர் ஆனிய நல்லொழுக்க போதனைகள் அதைபோன்று அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் கடந்த நூற்றாண்டின் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மிர்ஸா குலாம் அஹமது (அலை) அவர்களுடைய

போதனைகளுக்கும் உகந்தவாறு நேர்வழியை பெற பை-அத் என்னும் உடன்படிக்கையில் ஏற்படும் நபரை (அவரின் இஸ்லாஹிற்காக) இந்நூற்றாண்டின் கலீபத்துல்லாஹ் ஆகிய நான் அழைக்கிறேன். இஸ்லாஹ் (ISLAH) என்றால் தார்மீக மற்றும் அன்மீகமான திருத்தம் ஆகிறது. அதாவது அல்லாஹ்வின் தாழ்மையான ஊழியரின் (ஹஸ்ரத் முனீர் அஹமது அஸீம் (அலை) வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனையின் கீழ் நமது குறைபாடுகளை சரி செய்து நமது நடத்தையை மேம்படுத்தலாகும்.

நீங்கள் இப்பாதையில் நேர்மையுள்ளவராக இருந்தால் அல்லாஹ்விடமிருந்து வழிகாட்டுதல் மற்றும் ஒளியினை பெறுவீர்கள். அது நம்பிக்கை கொண்டவரின் இதயத்தை ஒளிரவைப்பதுடன் நேர் பாதையில் மேன்மேலும் முன்னேற்றத்தை அடைவதற்கு அவருக்கு வழிகாட்டுக்கிறது. இந்த நேர்வழியை பெற பின்வரும் பிரார்த்தனையை தவறாமல், வழக்கமாக செய்தவாறு இருங்கள்

❖ எங்கள் இறைவா நீ எனது பாவங்களை மன்னிப்பாயாக! என்னை உயர்ப்பண்புடையவனாக மாற்றிக்கொள்வாயாக! எனக்கு நேர்மையான வாழ்வாதாரத்தை அளிப்பாயாக! நான்பெற்றவற்றிலிருந்து திருப்தியடைவதற்கான ஆற்றலை எனக்கு வழங்குவாயாக! நீ என்னிடமிருந்து நீக்கி கொண்டவற்றை பெறுவதற்கான விருப்பத்திலிருந்து என் இதயத்தை சுத்தம் செய்வாயாக! எங்கள் இறைவா! எங்கள் மனம் திரும்புதலை ஏற்றுகொள்வாயாக! எங்கள் பாவங்களை எங்களிடமிருந்து நீக்கிகொள்வாயாக! எங்கள் பிரார்த்தனைகளுக்கு பதிலளிப்பாயாக! எங்கள் நம்பிக்கையை வலுப்படுத்துவாயாக! எங்கள் வார்த்தைகளை நேராக்குவாயாக! எங்கள் இதயத்தை உண்மையில் வழி நடத்திக் கொள்வாயாக! எங்கள் இதயத்தின் கோபத்தை தணிய வைப்பாயாக!

❖ எங்கள் இறைவா! எங்கள் பாவங்களை நீ மன்னிப்பாயாக! எங்கள் மீது நீ இரக்கம் காட்டுவாயாக! எங்களுக்கு சொர்க்கத்தைத் தந்தருளுவாயாக! நரகத்தின் நெருப்பிலிருந்து எங்களை பாதுகாப்பாயாக! அனைத்து வகையான வெளிவேஷங்களிலிருந்தும் எங்களை இரட்சிப்பாயாக! எங்கள் இறைவா! மிக வலுவான ஒரு நம்பிக்கையைத் தருமாறு நான் உன்னிடம் மன்றாடுகிறேன். நல்லொழுக்கத்தின் பாதையைப் பின்பற்றுவதற்கான ஒரு உறுதிப்பட்டை தந்தருளுவாயாக! உண்மையை மட்டும் உச்சரிக்கும் நிலையில் எங்கள் நாவினை மாற்றிவிடுவாயாக! எங்கள் இதயத்திற்கு ஆரோக்கியத்தை அளிப்பாயாக! நீ அறிந்த,

அனைத்து தீய செயல்களிலிருந்தும் எங்களுக்கு பாதுகாப்பை தருவாயாக! நிச்சயமாக உன்னிடமிருந்து மறைந்திருப்பதாக எதுவுமில்லை.

❖ எங்கள் இறைவா! உனக்கு அஞ்சிவாழும் திறனை எங்களுக்கு வழங்குவாயாக! எங்களுக்கும் எங்கள் பாவங்களுக்கும் இடையில் நீ ஒரு கேடயமாக இருப்பாயாக! சொர்க்கத்தில் நுழைய தகுதிபெறும் அளவிலான ஒரு கீழ்ப்படிதலை எங்களுக்கு வழங்குவாயாக! பேரழிவுகளை அச்சமின்றி எதிர்கொள்ளும் நிலையில் எங்கள் நம்பிக்கையை வலுப்படுத்துவாயாக! எங்கள் வாழ்நாள் முழுவதும் எங்களுக்கு சேவை புரியும் அளவுக்கு எங்கள் உடலுக்கு வலிமையை வழங்குவாயாக! இந்த தற்காலிக வாழ்கை, வாழ்கையின் இறுதி அல்ல என்ற நம்பிக்கையில் எங்களை உறுதிப்படுத்துவாயாக! எங்கள் அறிவு மிக அற்பமானதாகும்.

❖ எங்கள் இறவைா! நாங்கள் பின்னோக்கி செல்லாத அளவு எங்களுக்கு ஆற்றலை தந்தருளுவாயாக! எங்கள் நம்பிக்கை ஒரு போதும் அசையாமலிருப்பதற்கு வழிவகுப்பாயாக! எங்கள் இறவைா! நேர்மையான நடத்தை, பக்தி மற்றும் அடக்கத்தினை நீ எங்களுக்கு வழங்குவாயாக! மற்றவர்களின் உதவியின்றி வாழ்வதற்கு வழிவகுப்பாயாக!

❖ எங்கள் இறவைா! எனது ஓரேயொரு குறிக்கோள் நீ, உன்னை, உனது திருப்தியை அடைவதுதான். ஆமீன்

முனீர் அஹமது அஸீம் (17 Shawwal 1431 AH)

ஹஸ்ரத் கலீ:.பத்துல்லாஹ், அல் - மஸீஹ், அல் மஹ்தி

# JAMAAT UL SAHIH AL ISLAM

## FORM OF INITIATION (BAI' ATH)

### ஜமாஅத்துச் சஹீஹில் இஸ்லாம்
### பை-அத் ஏற்பதற்கான விண்ணப்ப படிவம்

மதிப்புக்குரிய ஹஸ்ரத் கலீ.பத்துல்லாஹ் அல்-மஸீஹ் மௌஊத் அவர்களுக்கு,

அல்லாஹ்வின் அமைதி, கருணை மற்றும் ஆசிர்வாதம் உங்கள் மீது இருக்கட்டும்.

இஸ்லாமின் அடிப்படை நம்பிக்கை, முஸ்லீம்களின் பொதுவான கடமைகள் ஹஸரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் அளித்த பை – அத்தின் நிபந்தனைகள் மற்றும் அதை தொடர்ந்து நீங்கள் அதாவது ஹஸ்ரத் அமீறுல் மும்மினீன், முஹைத்தீன், கலீ.·.பத்துல்லாஹ், அல் மஸீஹ் ஆகிய முனீர், அஹமது அஸீம் அவர்கள் அளித்த சிறப்பான விளக்கங்களை மிக நல்ல முறையில் படித்து, புரிந்து அதனை முழுமையாக ஒப்புகொள்கிறேன்.

உங்களுடைய நேர்மையான தோழர்களின் ஒருவனாக இருக்க எனக்காக அல்லாஹ்விடத்தில் பிரார்த்தனை செய்யுமாறு மிக பணிவுடன் நான் கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறேயானால் அல்லாஹ் என்னை அங்கரித்துக் கொள்வான் என்றும் அல்லாஹ்வை அடைவதற்கான வழிகளை அவன் உங்கள் வாயிலாக எனக்கு வகுத்தருளுவான் என்றும் அது மூலம் நான் நேர்மையாளர்களில் ஒருவனாக (Swaleheen) மாறிவிடுவேன் என்றும் எண்ணுகின்றேன்.

اشْهَدُ انْ لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ، وَ اَشْهَدُ اَنَّ مُحَمَّدً ا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اشْهَدُ انْ لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ، وَ اَشْهَدُ اَنَّ مُحَمَّدً ا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

**“வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வின்றி மற்றொருவருமில்லை, அவன் ஏக இறைவனும் இணையற்றவனுமாக இருக்கின்றான் என்று நான் உறுதிமொழிகிறேன். திரு நபி முஹம்மது (ஸல்) அவர்கள் நிச்சயமாக அவனது தூதர் மற்றும் சேவகர் என்று நான் உறுதிமொழிகிறேன்.”**

இந்த விண்ணப்ப படிவத்தின் கீழ் கையொப்பம் செய்த நான் ஹஸ்ரத் கலீ.·.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் அவர்களின் கரங்களில் பை-அத்து செய்து ஜமாஅத்து சஹீஹில் இஸ்லாமில் இணைந்திருக்கிறேன்.

ஹஸ்ரத் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் “காத்த முன்நபியீன்” என்று நான் உறுதியாக நம்பிக்கைகொள்கிறேன்; கூறுகின்றேன். அதைப்போலவே ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அலை) அவர்கள் அன்னாரின் காலகட்டத்தின் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் இமாம் மஹ்தி ஆவார் என்று நான் நம்பிக்கை

கொள்கிறேன். அதைப் போன்றே ஹஸ்ரத் முனீர் அஹமது அஸீம் அவர்கள் இந்நூற்றாண்டில் அல்லாஹ் அனுப்பிய கலீ.்.பத்துல்லாஹ் மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆவார் என்றும் நான் நம்பிக்கைகொள்கிறேன்; ஒப்புக்கொள்கிறேன்.

- ❖ எனது எல்லா பாவங்களுக்கும் நான் அல்லாஹ்விடம் மன்னிப்பு கேட்கிறேன். எதிர்காலத்தில் எல்லா வகையான பாவங்களிலிருந்தும் என்னால் இயன்ற வரை பாதுகாப்பை பெற முயர்ச்சிப்பேன்.
- ❖ நான் ஒரு போதும் அல்லாஹ்வுக்கு இணைவைக்கமாட்டேன். உலக காரியங்களைவிட நான் இஸ்லாமிய மார்க்கத்திற்கு முதல் இடம் அளிப்பேன்.
- ❖ இஸ்லாமின் எல்லா கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டு வாழ என்னால் இயன்றவரை நான் முயற்சிபேன். திருகுர் -ஆனிய போதனைகள், ஹதீஸ் பாடங்கள், ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அலை) அவர்களின் நூல்களை என்னால் இயன்றவரை படித்துக் கொள்வேன்.
- ❖ இந்த நூற்றாண்டின் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் கலீ.்.பத்துல்லாஹ் ஆகிய ஹஸ்ரத் அமீறுல் மூம்மினீன் முனீர் அஹமது அஸீம் அவர்களின் அனைத்து வாதங்களையும் நான் ஒப்புக்கொள்கிறேன்.
- ❖ இஸ்லாத்தின் பிரச்சாரம் என்பது எனது கடமைகளில் முதன்மையானது என்று நான் எண்ணுகிறேன். இந்த நூற்றாண்டில் இறைவனிடமிருந்து நீங்கள் பெறும் வெளிப்பாடுகள் மற்றும் எல்லா நல்ல காரியங்களுக்கும் நான் கீழ்ப்படிவேன். இந்நூற்றாண்டில் உங்கள் வாயிலாக மனிதர்களின் இதயங்களில் இஸ்லாத்தின் உண்மைத்தன்மையை மீண்டும் நுழையவைப்பதற்கு முடியும் என்று நான் ஒப்புக்கொள்கிறேன்.

**استغفر الله ربی من کل ذنب و اتوب الی**

**எனது எல்லா பாவங்களுக்கும் நான் அல்லாஹ்விடம் மன்னிப்பு கேட்கிறேன். பாவமன்னிப்பைக் கோரி நான் அவனிடம் திரும்புகிறேன்.**

**رب انی ظلمت نفسی واعترفت بزنبی فاغفر لی زنوبی فانه لا یغفر زنوب الا انت**

**எனது இறைவா! நான் என் ஆன்மாவுக்கு அநீதி இழைத்திருக்கிறேன். நான் என் பாவங்களை ஒப்புக்கொள்கிறேன். என்னை நீ மன்னிப்பாயாக! உன்னைத் தவிர பாவங்களை மன்னிக்கும் மற்றொருவர் இல்லை.**

# FORM OF INITIATION/ பை அத் ஏற்பதற்கான விண்ணப்பபடிவம்

## JAMAAT UL SAHIH AL ISLAM/ ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம்

SURNAME/குடும்பபெயர் : .................................. NAME/பெயர் : ..................................

ADDRESS/ முகவரி : ..................................................................................................

CITY / நகரம் : ..............................................

TELEPHONE / தொலைபேசி எண் : ..............................................

COUNTRY / நாடு : ........................................

MEMBERS OF THE FAMILY/ குடும்ப உறுப்பினர்கள் :

| | SEX/பாலினம் M/F/ஆண்/பெண் | | SEX/பாலினம் M/F/ஆண்/பெண் |
|---|---|---|---|
| 1. .................... | | 11. .................... | |
| 2. .................... | | 12. .................... | |
| 3. .................... | | 13. .................... | |
| 4. .................... | | 14. .................... | |
| 5. .................... | | 15. .................... | |
| 6. .................... | | 16. .................... | |
| 7. .................... | | 17. .................... | |
| 8. .................... | | 18. .................... | |
| 9. .................... | | 19. .................... | |
| 10. .................... | | 20. .................... | |

Signature/கையொப்பம்  Date of Initiation/பை - அத் ஏற்க்கப்பட்ட நாள்

Head of the Family/குடும்பத்தலைவர்:

Signature/கையொப்பம்:

President of the Jamaat Ul Sahih Al Islam/தலைவர்- ஜமா அத்துச்சஹீஹில் இஸ்லாம்:

Date/நாள் : ........................